**தலைப்பு 255 – கொழும்பு மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூன் 29 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கொழும்பு மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக் கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1) (இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடு, கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களும் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்ததாகவும்

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவினங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலமெதுர கட்டிடத்தில் மின்சாரம் மற்றும் நீர் பட்டியல் கொடுப்பனவுகள், அதில் தாபிக்கப்பட்டிருக்கின்ற நிலையங்கள் பாவனை செய்யும் நில அளவின் படி மின்சாரப் பட்டியலினை அறவிடப்பட வேண்டியுள்ள போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக வருடாந்த மின்சார மற்றும் நீர் விலைப் பட்டியலான ரூபா 44,995,794 வில் மாவட்ட செயலகம் மற்றும் திம்பிரிகஸயாய பிரதேச செயலகம் பாவனை பண்ணும் பரப்பளவின் படி அறவிடப்பட வேண்டிய மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல் ரூபா 23,973,170 இருந்தது. கணக்கின் படி அது ரூபா 26,621,115 ஆன படியினால் ரூபா 2,647,945 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | செலவின காசேட்டின் படி மீதி சரியாக இருப்பதாக அறியத் தரப்பட்டுள்ளது. | செலவினங்களினை கணக்கிலிடும் போது மாவட்ட செயலகத்திற்கான செலவினத்தினை சரியாக கணக்கிட்டு கணக்கிலிடப்பட வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | அரச ஊழியர்களின் முற்பண ''பீ'' கணக்கின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி கொழும்பு மாவட்ட செயலக புத்தகத்தின் படி ரூபா 203,620,678 மற்றும் திறைசேரி பத்தகத்தின் படி ரூபா 204,771,372 ஆக இருந்தன. 2013 வருடம் முதல் இற்றை வரை 9 வருடங்கள் காலம் கழிந்திருந்த போதிலும் தீர்க்கப்படாத ரூபா 1,150,694 ஆன இணக்கம் காணப்படாத வரவு மீதி இதற்குக் காரணமாகும். | இத்தீர்வு காணப்படாத மீதியினை வட்டியிலிருந்து தள்ளுபடி செய்வதற்கான பரிந்துரையினை பெற்றுத் தருமாறு கோரப்பட்ட அறிக்கையினை பொதுக் கணக்குகள் குழு மற்றும் உள்விவகார இராஜாங்க அமைச்சின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. | திறைசேரி ஏடுகள் மற்றும் திணைக்களத்தின் ஏடுகளின் படி வேறுபாட்டுக்கு தொடர்பான இணக்கம் காணப்படாத மீதியினை துரிதமாக தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | சேவைக்கான இடமாற்றம், மரணமடைதல், ஓய்வு பெற்றுச் செல்லல், வேலை இடைநிறுத்தம், மற்றும் சேவையை விட்டுச் செல்லல் ஆகிய காரணிகளினால் 35 ஊழியர் தொடர்பில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவிடப்பட வேண்டியிருந்த கடன் நிலுவைப் பணம் ரூபா 3,631,960 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 1,257,867 ஆன கடன் நிலுவை 19, இரண்டு வருடத்திற்கும் மேலாக அறவிடப்பட வேண்டி இருந்தவைகளாகும். | மொறட்டுவை நகர சபைக்கு மாற்றலாகிச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 113,607 கடன் நிலுவையில் ரூபா 450 மாதாந்த தவணைப் பணமாகவும், ஓய்வு பெற்றுச் சென்ற ஒரு உத்தியோகத்தரிடமிருந்து ரூபா 1,020 மாதாந்த தவணைப் பணமாக அவருடைய ஓய்வூதிய பணத்திலிருந்தும், வேலையிலிருந்து இடைநிறுத்தப்பட்ட 12 உத்தியோகத்தர்களிடமிருந்தும் அறவிடப்பட வேண்டியுள்ள நிலுவைப் பணம் ரூபா 1,007,794 ஆக இருந்ததுடன் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டு இத்தொகையினை தற்போதுள்ள தொகை வரை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து நிலுவையாக உள்ள கடன் மீதிகளினை ஒரேயடியாக அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நிலுவைக்காலம் 04 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரை ரூபா 134,430 வேலையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதியொன்று மீண்டும் சேவைக்கு சமுகமளித்ததன் பின்னர் அறவிடப்படும். | |

**(இ) வைப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (i) திறைசேரி புத்தகப் படி வைப்புக் கணக்கு மீதி ரூபா 953,922,168 ஆக இருந்தாலும், மாவட்ட செயலக புத்தகப் படி அம்மீதி ரூபா 963,922,168 ஆன இருந்தமையினால் ரூபா 10,000,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. 14 வருடங்களுக்கு மேல் கடந்து விட்டிருந்த போதிலும் 2019 ஒக்தோபர் 15 ஆந் திகதிய மற்றும் இலக்கம் 269/2019 கொண்ட பொதுக் கணக்குகள் சுற்றுநிருபத்தின் 3.7 ஆம் பந்தியின் ஏற்பாட்டின் பிரகாரம் சரிசெய்து தீர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2007 வருடம் முதல் தொடர்ந்து வரும் இந்த பொது வைப்புக் கணக்கின் ரூபா 10 மில்லியன் வரவு மீதி தொடர்பில் 2017 சனவரி 26 ஆந் திகதிய பொதுக் கணக்குகளுக்கான குழுவில் கலந்துரையாடப்பட்டது. அதன் போது பெற்றுத் தரப்பட்ட ஆலோசனைப் படி குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன் இதனை தள்ளுபடி செய்வது பொருத்தமென அக்குழுவினால் பரிந்துரைக்கப்பட்டது. அதன்படி பொதுக் கணக்குகள் பணிப்பாளர் தலைமை அதிபதியின் தலைமையில் கலந்துரையாடல் நடாத்தப்பட்டதுடன் அதில் இந்த பொது வைப்புக் கணக்கில் வரவு மீதியினை ஏற்பட்ட காலகட்டத்தில் மாவட்ட செயலகத்தில் சேவை புரிந்த உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு திரும்ப விசாரணையொன்று மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதன்படி அவ்வுத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு விசாரணை நடாத்தப்பட்டதுடன் சம்பந்தப்பட்ட அறிக்கையை பொதுக் கணக்குகள் | இவ்வரவு மீதியினை தீர்த்துக் கொள்வதற்கு சுற்று நிருப ஏற்பாடுகளுக் கமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்திடம் 2022.03.09 திகதி முன்வைக்கப்பட்டது. அவ்வறிக்கையின் படி பொதுக் கணக்குகள் திணைக்களம், திறைசேரி செயற்பாட்டு திணைக்களத்திடம் சம்பந்தப்பட்ட தவறினை திருத்துவதற்கான குறிப்பினையை கணக்கிலிடுவதற்கான விதம் குறித்து ஆலோசனை பெற்றக் கொள்ளும் படியாக அறிவிக்கப்பட்டிருந்தது. 2022.04.26 ஆந் திகதி திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தை விடுவிக்கப்பட்டு ஆலோசனை வழங்கும் படி கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் இது இன்னும் தீர்க்கப்படாது உள்ளது. | |
| (ii) | நஷ்டஈடு வழங்குவதற்கு முன்னர் தற்போதுள்ள காணிகளை கையேற்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை துரிதமாக முடிக்கப்பட்டு காணிகளுக்கான நஷ்டஈடுகள் வழங்கப்பட்டு அவ்வைப்பு மீதிகள் தீர்க்கப்படுவதற்கான போதிய அளவிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் காமையினால் நஷ்டஈட்டு வைப்புக் கணக்கில் 13 பிரதேச செயலகங்கள் தொடர்பில் 05 வருடம் அல்லது அதற்குக் கூடிய காலம் காலாவதியான வைப்புப் பெறுமானம் ரூபா 102,827,540 அவதானிக்கப்பட்டது. அவற்றில் 03 பிரதேச செயலகங்கள் தொடர்பாக 38 வைப்புக்களில் ரூபா 12,127,493 பத்து வருடங்களுக்கும் மேலான பழைய மீதிகள் ஆகும். நிதிப்பிரமாணம் 570(அ) படி காணிகளுக்கான நஷ்டஈட்டினை வைப்புச் செய்யப்பட்ட | காணிகளுக்கான நஷ்டஈடு வழங்குவதற்காக நடாத்திச் செல்லப்படும் பொது வைப்புக் கணக்கில் தீர்க்கப்படாத மீதிகள் இருப்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். இம்மீதிகளுக்கிடையே செயற்படு கோவைகள் இருப்பதனையும் அக்கோவைகள் தொடர்பாக துரித நடவடிக்கை மேற்கொள்வதற்கும் ஏனைய கோவைகள் தொடர்பில் பரீட்சிக்கப்பட்டு பொது வருமானத்தில் சேர்ப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வைப்புக்களை விடுவிப்பதற்காக தற்போது நிலவும் பிரச்சினைகளை துரிதமாக தீர்க்கப்பட்டு நிதிப் பிரமாண ஏற்பாடுகளின் பிரகாரம் தீர்த்திடாத வைப்புக்களை தீர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியிலிருந்து 10 வருடங்கள் கழிந்ததன் பின்னர் காலாவதியான வைப்புக்களாக பொது வருமானத்தில் சேர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் அம்மீதிகள் தொடர்பில் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | | |
| (iii) | உள்விவகார இராஜாங்க அமைச்சு மற்றும் தேர்தல்கள் திணைக்களத்தினால் நில மெதுர கட்டிடத்தில் அந்நிறுவனங்களினால் பாவனை மேற்கொள்ளப்படும் தளங்களுக்காக 2021 வருடம் மின்சாரம் மற்றும் நீர்ப்பட்டியல் செலவினங்களை குறை நிரப்புவதற்காக முறையே ரூபா 6,946,207 மற்றும் ரூபா 1,011,589 கிடைக்கப் பெற்றிருந்த போதிலும் செலவினத்திற்காக சீராக்கல் மேற்கொள்ளப் படாமல் பொது வைப்புக் கணக்கில் இடப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்பின் படி சுட்டிக் காட்டப்பட்டுள்ள பொது வைப்புக் கணக்கு மீதிகளுக்கான சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | செலவின குறை நிரப்புக்காக கிடைக்கப் பெற்ற பணத்தினை சம்பந்தப்பட்ட வருடத்திற்கு உள்ளேயே தீர்க்கப்பட வேண்டும். |

**(ஈ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | சென்ற வருட இறுதியில் நிதியல்லா சொத்துக்களின் மீதி ரூபா 8,430,427,962 ஆயினும் மீளாய்வு ஆண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 8,459,216,204 காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 28,788,242 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | அவதானிப்பை ஏற்கின்றேன். இணங்கப்பட்ட ஆரம்ப மீதிகள் மற்றும் தள்ளுபடி மீதிகள் சென்ற ஆண்டினை திகதியில் உட்படுத்தப்பட்ட மையினால் இவ்வேறுபாடு ஏற்பட்டது. | சரியான மீதியினை கணக்குகளில் காட்டப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | நிதி செயலாற்றல் அறிக்கையின் படி மீளாய்வாண்டினுள் மூலதன சொத்துக்களின் கையேற்றல் ரூபா 341,558,089 ஆயினும் திறைசேரி குறிப்பின் படி அது ரூபா 312,774,417 ஆக இருந்தமையினால் ரூபா 28,783,672 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (iii) | நிதி நிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக ரூபா 8,777,578,249 காட்டப்பட்டிருந்த போதிலும் அச்சொத்துக்களின் தனியான மீதிகளினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நிரந்தர சொத்துக்களுக்கான பட்டியலினை முன்வைக்கவில்லை. அதற்குப் பதிலாக சமர்ப்பிக்கப்பட்ட கணினி தரவு அறிக்கையின் படி தனியான மீதிகளின் தகவல்கள் அதாவது கொள்வனவு விலை கொள்வனவுத் திகதி மற்றும் தொடரிலக்கம் போன்ற சொத்துக்களை இனங்கண்டு கொள்வதற்கான தகவல்கள் உட்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. அக்கணினித் தரவு அறிக்கையிலேயே தொகுதித்தளிக்கப்பட்ட மீதிகளின் கூட்டுப் பெறுமதி திறைசேரி பரம்பலின் மீதிகளுடன் இணங்கவில்லை. | நிரந்தர சொத்துக்களின் பட்டியலினை முன்வைக்க முடியாது போய் இருந்தாலும் BOS REPORT பெற்றுக் கொடுக்கப்பட்டமையினை அறியத் தருகின்றேன். | நிரந்த சொத்துக்களின் பட்டியலை அல்லது அதற்குப் பதிலாக பாவனை மேற்கொள்ளப் படுகின்ற கணனித் தரவு அறிக்கையை தனியான மீதிகள் தொடர்பாக சகல தகவல்களும் உட்படும் படியாக ஒவ்வொரு சொத்துக்களும் தொகுக்கப்பட்டு தயாரிக்கப்படல் வேண்டும். |
| (iv) | ரத்மலான மற்றும் சீத்தாவாக்க பிரதேச செயலகங்களுக்கு உரித்தான உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதி மாவட்ட செயலகங்களின் | சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் சொத்துக்களை ஆரம்ப மீதியாக உட்படுத்துவதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தினை மட்டும் இடமளிக்கப்பட்ட மையினால் பெறுமான மதிப்பீட்டுத் | உத்தியோகபூர்வ இல்லங்கள் தொடர்பாக பேணப்படும் பதிவுகள் மற்றும் CIGAS பதிவுகளின் |

| | | | |
|---|---|---|---|
| | புத்தகங்களின் படி முறையே ரூபா 5,120,000 மற்றும் ரூபா 8,000,000 ஆக இருந்த போதிலும் நிதியல்லா சொத்துக்களுக்கான பிரதேச செயலகங்களினால் பெற்றுத்தரப்பட்ட CIGAS அறிக்கைகளின் படி அவை முறையே ரூபா 6,970,000 மற்றும் 130,500,000 ஆக இருந்தமையினால் ரூபா 1,850,000 மற்றும் ரூபா 122,500,000 வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | திணைக்களத்திலிருந்து சரியான மதிப்பீடுகள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் சேர்த்துக் கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | இனங்காமை களினை பரீட்சிக்கப்பட்டு தேவையான திருத்தங்கள் செய்யப்படல் வேண்டும். |
| (v) | 04 பிரதேச செயலகங்களுக்குரிய 05 உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதியினை மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு சரியான பெறுமதியினை சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்தப்படும். | உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உட்படுத்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(உ) கட்டுநிதி மீதி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கட்டுநிதி பெறுவனவுகள் மற்றும் செலுத்தல்கள் திணைக்கள புத்தகப்படி ரூபா 10,943,141,463 ஆக இருந்த போதிலும் திறைசேரி புத்தகப்படி அது ரூபா 11,047,371,463 ஆக இருந்தமையினால் ரூபா 104,230,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | கட்டுநிதிக் கணக்கில் திறைசேரியினால் 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி முறையே ரூபா 57,380,000 மற்றும் ரூபா 46,850,000 தவறுதலாக பெறுவனவுகளாக உட்படுத்தப்பட்டு மீண்டும் அப்பெறுமதிகளினை செலுத்தல்களாக உட்படுத்தப்பட்டன. இவை தொடர்பான மாற்றுபத்திரம் கிடைக்காமையினால் கணக்குகளில் திருத்தங்கள் செய்ய முடியாது போயிற்று. | திணைக்கள புத்தகங்கள் மற்றும் திசைேரி புத்தகங்கள் ஆகியனவற்றை ஒப்பீடு செய்யப்பட்டு வேறுபாட்டினை தீர்க்கப்பட வேண்டும். |

## (ஊ) கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய சான்றுப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரிக்கப்பட்டு பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் அத்தாட்சிப்படுத்தப்பட வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வ தன்மையினை பற்றி காலத்திற்குக் காலம் மீளாய்வினை மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை பயனுள்ள வகையில் பேணிச் செல்வதற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளதாகவும் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் முன்வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வினை மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்றுக்கள் கணக்காய்வினைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகங்களின் அலுவல்கள் தொடர்பாக செயற்திட்டம் மற்றும் அதற்குரிய அறிக்கைகள் பிரகாரம் செயற்படுவதுடன் அது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்ட முறைமை மற்றும் மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் பரீட்சிப்பு ஆகிய பின்னூட்டல்கள் நிதி முகாமைத்துவம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுகள் மற்றம் கணக்காய்வுக் குழுக் கூட்டங்களின் போது கலந்துரையாடப்படுவது, பிரதேச செயலாளர் சம்மேளத்தினை மாதாந்தம் நடாத்தப்படுவதன் மூலம் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை மீளாய்வு மேற்கொள்ளப்பட்டு முறைமையினை ஆக்கபூர்வமாக பேணிச் செல்வதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனையும் அவ்வாறு மேற்கொள்ளப்படும் மீளாய்வுகள் தொடர்பான அறிக்கைகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கும் படியும் உத்தியோகத்தர் களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 38 ஆவது பிரிவின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்க்ள மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான தேறிய ஒதுக்கீடு ரூபா 3,364 மில்லியன் ஆனதுடன் அதில் ரூபா 2,857 மில்லியன் வருடத்தினுள் செலவிடப்பட்டிருந்தது. அதன்படி தேறிய ஒதுக்கீட்டின் சேமிப்பு ரூபா 507 அல்லது நூற்றுக்கு 15 வீதமாக இருந்ததுடன் நூற்றுக்கு 36.78 ஆன மூலதன ஒதுக்கீட்டின் சேமிப்பு அதற்கு பிரதான காரணியாக அமைந்தது. | 255-1-1-1-0-2104 செலவின விடயத்தை மதிப்பீடு செய்கையில் ஏற்பட்ட தவறானதாயும் ஏனைய விடயங்கள் தொடர்பாக 2021 வருடம் நிலவிய உலகளாவிய தொற்று நிலைமை காரணமாக ஈட்டிக் கொள்வது மற்றும் கொள்வனவு செயற்பாடுகள் கட்டுப்படுத்தல் மற்றும் 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 21/1596/304/134 இலக்கம் கொண்ட அமைச்சரவை பத்திரம் மூலம் செலவின முகாமைத்துவம் ஆகியன தொடர்பில் கட்டுப்பாடு விதித்தல் காரணிகளாயின. | ஒதுக்கீடுகள் செயற்திறனுடனும் பாவனை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | செலவின விடய இலக்கம் 255-1-1-3-1205 கீழ் அத்தியாவசிய உணவுப் பொருட்களை குறைந்த விலையில் மக்களுக்கு பெற்றுக் கொடுக்கும் ஒழுங்குமுறையொன்றினை தயாரிக்கும் பொருட்டு குறைநிரப்பு மதிப்பீட்டிலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 3,000,000 ஒதுக்கீட்டில் ரூபா 1,850,417 அதாவது 61.68 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | நிவாரண விலையில் அத்தியாவசிய உணவுப் பொதிகள் பெற்றுக் கொடுப்பதற்கான இந் நிகழ்ச்சித் திட்டத்தினை ஏற்பாடு செய்திருந்தமை, நுவரெலியா, ஹம்பாந்தோட்டை மற்றும் அனுராதபுரம் ஆகிய இடங்களின் மரக்கறி பண்ணைகளின் மேலதிக மரக்கறி விளைச்சலினை கொழும்பு மாவட்டத்திலுள்ள மொத்த வியாபாரிகளுடன் தொடர்பு கொண்டு மொத்த விலைக்கு விற்பனை செய்வதாகும். ஆயினும், மரக்கறி பழுதடைதல் வாகனங்களில் கொண்டு செல்லுகையில், ஏற்படும் சேதம் மற்றும் சரியான முறையில் சந்தையினை இனங்கண்டு கொள்ளாமை ஆகிய காரணிகளினால் இத்திட்டம் கைவிடப்பட்டது. | ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக ஒதுக்கீட்டினை கோருகையில் அதற்கான முறையான திட்டம் வகுக்கப்பட வேண்டியதுடன் அதனை வினைத் திறனுடன் பாவனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மொத்தம் ரூபா 1,464,800,000 ஆன 20 செலவின விடயங்களுக்கான ஆரம்ப செலவின திட்டத்தினை மீளாய்வாண்டினுள் திருத்தத்திற்குட் படுத்தப்பட்டிருந்ததுடன் அது ஆரம்ப திட்டத்தில் நூற்றுக்கு 77 சதவீதம் முதல் நூற்றுக்கு 334 சதவீதத்தில் காணப்பட்டது. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். | திட்டங்கள் சரியான முறையில் வகுக்கப்படல் வேண்டும். |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளல்**

பின்வரும் அவதானிப்புக்க்ள மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 27 ஆந் திகதிய இலக்கம் 255/2017 கொண்ட பொதுக் கணக்குகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் படி “கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தீர்ப்பதற்கான செயற்தொடர்” உள்ளடங்கும் படியாக சிகாஸ் (CIGAS) கணக்கீட்டு முறைமையினை இற்றைப்படுத்தப்பட்டுள்ள மையினால் கொடுக்கல் வாங்கல் சம்பந்தப்பட்ட செயற்தொடரில் சகல கட்டத்தினையும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மாவட்டச் செயலகங்களுக்கான CIGAS பதிவுகளினை பரீட்சிக்கும் போது அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்க | தவறுதலாக நேர்ந்துள்ளமையினால் இதனகத்திற்குப் பின்னர் அவ்வாறான நிலைமைகள் ஏற்படாதிருப்பற்கு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வில்லை. திறைசேரிக் கூற்றில் (SA-92) 04 பிரதேச செயலகங்களில் 2018, 2019 மற்றும் 2020 வருடங்களுக்கான இனங்காணப்பட்ட ரூபா 500,487 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் மீதியொன்று 2021 திசெம்பர் 31 வரையிலும் சிகாஸ் கணக்கீட்டு முறைமையில் இருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கையின் இலக்கம் 02/2020 இன் 10.1 பந்தியில் காட்டப்பட்டுள்ள படி பொதுக் கணக்குகள் திணைக்களத்தின் வழிகாட்டல் இலக்கம் 06 இல் 3.4 பந்தியின் ஏற்பாட்டின் படி நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் (குறிப்பு iii) காணப்படும் பொறுப்புக்கள் திறைசேரியினால் ஒவ்வொரு செலவின விடயம் தொடர்பாக வெளியிடப்படும் கடப்பாடு மற்றும் பொறுப்புக்களுக்கான கூற்றில் (SA-92) பொறுப்புக்களுக்கான மீதியுடன் இணக்கம் காணப்பட்டிருக்க வேண்டும். ஆயினும், நிதிக்கூற்றுக்களில் குறிப்பு iii படி பொறுப்புக்களுக்கான மீதி ரூபா 6,430,089 மற்றும் திறைசேரிக் கூற்றின் (SA-92) படி ரூபா 515,187 ஆனதினால் ரூபா 5,914,902 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2021 வருடத்திற்கான பொறுப்புக்களினை CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் உட்படுத்துவதற்காக 2022 சனவரி 21 வரையிலான காலத்தினை பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அதிகப்படியான பொறுப்புக்கள் அத்திகதிக்குப் பின்னர் பதியப்பட்ட பொறுப்புக்கள் ஆனதுடன் அப்பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் பொறுப்புக்களாக உட்படுத்தப்பட்டிருக்காமை அதற்குக் காரணமாக இருந்தது. | - மேற்படி - |

3. **செயற்பாட்டு மீளாய்வு**

3.1 **திட்டமிடல்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
| --- | --- | --- | --- |
| (அ) | செயற்படு திட்டத்தினை வகுத்தல் | | |
| (i) | சம்பந்தப்பட்ட வருடம் இற்றைப்படுத்தப்பட்ட ஏற்பாட்டு அமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழாம் மற்றும் தற்போதுள்ள பணிக்குழாம் பற்றிய விபரங்கள் உட்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் பணிக்குழாமின் விபரங்களில் பிரதேச செயலக பணிக் குழாமின் விபரம் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. மேலும் பணிக்குழாமிக்கான விபரங்களில் மேலதிக மாவட்ட செயலாளர் பதவிகள் இரண்டினை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன்படி நிலையத்தின் ஏற்பாட்டு அமைப்பினை இற்றைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். முன்வரும் வருடங்களில் அவதானிப்புக்களின் பால் கவனம் செலுத்தப்பட்டு செயற்படுவதற்கு குறித்துக் கொண்டேன். | வருடாந்த செயற்படு திட்டத்தினை சரியான முறையில் வகுக்கப்படல் வேண்டும். |
| (ii) | சம்பந்தப்பட்ட வருடத்திற்கான வரவு செலவினை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் படி தயாரிக்கப்பட்ட செயற்படு திட்டத்திற்கு பதிலாக மாவட்ட செயலகங்களில் பிரிவு வரியாக மேற்கொள்ளப்படும் நாளாந்த அலுவல்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. | மாவட்ட செயலகம், மாவட்ட செயலகத்திற்காக மாத்திரம் வரவு செலவுத் திட்டத்தினை வகுக்கும் நிறுவனம் அல்லாததுடன் பாரிய அலுவல் அளவினை ஒன்றிணைக்கும் நிலையமும் ஆகும். ஆகையால், வரவு செலவினை அடிப்படையாகக் கொள்ளப்பட்ட முன்னுரிமையின் படி தயாரிக்கப்பட்ட செயற்படு திட்டத்தினையும் தயாரிக்கப்படுவதுடன் அதற்கு நேரொத்த மாவட்ட செயலகங்களினால் நிறைவேற்றப்படும் பிரிவு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | வாரியான அலுவல்களும் கவனத்தில் கொள்ளப்பட்டு அறிக்கையினை தயாரிக்கப்படுகின்றது. | |
| (iii) | திட்டமிடப்பட்டுள்ள பிரதான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்கான பெறுகைத் திட்டத்தினை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கணக்காய்வு அவதானிப்பு சரியானதென ஏற்கின்றேன். | சகலவித பெறுகை திட்டங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**3.2 எதிர்பார்த்த விளைவுமட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை**

பின்வரும் அவதானிப்புக்ள மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத் திட்டத்தின் கீழ் 06 பிரதேச செயலகத்திற்கான ரூபா 2,990,000 ஒதுக்கீடு அங்கீகரிக்கப்பட்ட 16 திட்டங்கள் அதாவது ரூபா 105,000 ஆன பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான 2 திட்டங்கள், ரூபா 2,885,000 ஆன 12 நிர்மாணிப்புத் திட்டங்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக முடிப்பதற்கு இயலாது போயிருந்தன. | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு வேலைத்திட்டம் தொடர்பாக கணக்காய்வு விசாரிப்பில் சுட்டிக்காட்டி இருப்பது போன்று எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை பெற்றுக் கொள்ளப்படாத திட்டங்கள் என்பதனை ஏற்றுக் கொள்கின்றேன். இது போன்ற திட்டங்கள் எதிர்வரும் வருடங்களில் ஒதுக்கப்படும் ஒதுக்கீடுகளிலிருந்து முன்மொழியும் படி உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. | எதிர்பார்த்த விளைவு மட்டத்தினை ஈட்டிக் கொள்வதற்கு செயற்பட வேண்டும். |
| (ஆ) | சௌபாக்கிய உற்பத்தி கிராம உட்கட்டமைப்பு அபிவவிருத்தி வேலைத்திட்டம் I இல் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள் 47 ஆகும். அதன்படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த செலவினம் ரூபா 54,502,410 மற்றும் கையிருப்புப் பணம் பட்டியல் பெறுமானம் ரூபா 8,995,587 என்பதனையும் அவதானிக்கப்பட்டது. அதில் பிரதேச செயலகம் ஒன்றுக்குரிய ரூபா | சௌபாக்கிய உற்பத்தி கிராம உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் இரண்டு திட்டங்கள் மாத்திரம் மேற்கொள்வதற்கு இயலாது போனதுடன் ஏனைய சகல திட்டங்களும் முடிக்கப்பட்டுள்ளன. | எதிர்பார்த்த விளைவு மட்டத்தினை ஈட்டிக் கொள்வதற்கு செயற்பட வேண்டும். |

441,000 ஆன திட்டமொன்றினை இரத்து செய்யப்பட்டுள்ளதுடன் ரூபா 559,000 ஆன திட்டமொன்றினை 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வேலையினை முடிப்பதற்கு இயலாது போய் உள்ளது.

## 3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு கொழும்பு மாவட்ட செயலகம் தீப்பற்றியதனால் ஏற்பட்ட சேதத்தினைக்கு 09 வருடம் மற்றம் மஹஹகமை மாவட்ட செயலகம் தீப்பற்றியதனால் ஏற்பட்ட சேதத்தினைக்கு 06 வருட காலத்திற்கும் மேல் கடந்துள்ளது. ஆயினும், அச்சேதங்களுக்கான அறவிடுதலுக்கு அல்லது தள்ளுபடி செய்தலுக் செயற்படாதிருந்தமையினால் ஏற்பட்ட நட்டம் மற்றும் சேதத்தின் பெறுமானம் முறையே ரூபா 92,606,688 மற்றும் ரூபா 629,492 ஆக மொத்தம் ரூபா 93,231,180 ஆகும். 09 வருடங்கள் கழியும் வரையிலும் இது தொடர்பான பொலிஸ் விசாரணை முடியாதிருந்தமையினால் அச்சேதங்களுக்கான அறவிடுதல் அல்லது தள்ளுபடி செய்தல் மேற்கொள்ளப்பட முடியாதிருந்தது. | மாவட்ட செயலகம் மற்றும் மஹரகம பிரதேச செயலகம் சம்பந்தப்பட்ட தீப்பற்றுதல் தொடர்பான பொலிஸ் விசாரணை இன்னும் முடிவடையாதுள்ளமையினை அறியத் தரப்பட்டுள்ளது. | நட்டம் மற்றும் சேதம் தொடர்பான பரீட்சிபபினை துரிதமாக மேற்கொள்ளப்பட்டு அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர் மற்றும் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கையும் மற்றும் அரசுக்கு ஏற்பட்ட நட்டத்திற்கு நிதிப்பிரமாணம் ஏற்பாட்டின் படி அதற்கு பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீளப் பெறுவதற்கும் அதன் பிறகு சேதத்தினை தீர்ப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.4 முகாமைத்துவ பலவீனங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்கிடுதல் மற்றும் மொழி பெயர்த்தலில் வழுக்கல், ஓய்வூதியத்தினை இருமுறை வழங்கல், ஓய்வு பெற்றவர்கள் இறந்ததன் பின்னர் அதனை உறுதிப்படுத்திக் கொள்ளப்படாமல் மேற்கொண்டும் ஓய்வூதிப் பணம் வழங்கல், இராணுவ ஓய்வூதியத்திற்கான இருமுறை வாழ்வாதார கொடுப்பனவு வழங்கல் ஆகிய பல்வேறு காரணிகளுக்காக கொழும்பு மாவட்ட பிரதேச செயலகங்கள் 13 தொடர்பான அதிகாரப் பிரதேசங்களிலுள்ள ஓய்வு பெற்றவர்களுக்கு முறைசாரா மற்றும் முறையற்ற விதத்தில் மேலிதக ஓய்வூதியப் பணம் வழங்கப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறாக 167 ஓய்வூதியப் பெறுனர்களுக்கு அவ்வாறு மேலதிகமாக வழங்கப்பட்டு இதுவரையிலும் அறவிடப்பட வேண்டியுள்ள ஓய்வூதியப் பெறுமானம் ரூபா 24,207,556 ஆனதுடன் அப்பணத்தில் ரூபா 21,475,400 ஆனது 5 வருடத்திற்கு குறைவான காலமாகவும் மற்றும் ரூபா 2,732,156 ஆனது 5-10 வருட காலமாகவும் அறவிடப்பட வேண்டியுள்ளவையாகும். | இவ்வாறான மேலதிகக் கொடுப்பனவுகளில் அதிகமானவை எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பால் நடக்கின்ற விடயங்களாவதுடன் மிகவும் தேர்ச்சியுள்ள உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இக்கணக்கிடுதல் ஆகக்கூடிய பிழையின்மையுடன் மேற்கொள்ளப்படுவதுடன் இம்மேலதிக கொடுப்பனவுகள் குறைப்பதற்கான வழிமுறை பற்றி பல சந்தர்ப்பங்களில் ஓய்வூதிய திணைக்களத்திடம் எழுத்து மூலமும் வாய்மூலமும் முன்மொழிதல் முன்வைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக இதுவரையிலும் எவ்வித அனுகூல பிரதிபலிப்பினையும் கிடைக்கப் பெறவில்லை. மேலும் பிரதேச செயலகங்கள் ஊடாக ஓய்வூதியப் பணம் தபால் நிலையங்கள், கிராம வங்கிகள் மற்றும் கூட்டுறவு (சனச) சங்கங்கள் மூலம் வழங்கப்படுகின்றன. பொதுவாக அவ்வாறு 5191 ஓய்வூதிய பெறுனர்களுக்கு (2022 மே 31 வரை) மட்டும் வழங்கப்பட்டுள்ளதுடன் சம்பந்தப்பட்ட ஓய்வூதியப் பெறுனர் இறந்ததன் பின்னர் மேலதிக வழங்கல் மேற்கொள்ளப்படுவதில்லை எனவும் ஒருவேளை அவ்வாறு வழங்கப்பட்டாலும் அதனை மீள அறவிடுவதற்கான இயலுமை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | ஓய்வூதியத்தினை சரியாகவும் மற்றும் முறையாகவும் ஒழுங்குபடுத்தி அவற்றை பரீட்சித்ததன் பின்னர் ஓய்வூதியத்தினை வழங்கவும் ஓய்வூதியம் பெறுனர் தொடர்பாக உயிருடன் உள்ள ஓய்வூதியப் பெறுனர்களுக்கு மாத்திரம் ஓய்வூதியம் வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை துரிதமாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கொலன்னாவ பிரதேச செயலகம் அமைந்துள்ள காணியில் அனுமதியின்றி 11 பேர் வதித்திருந்ததுடன் அவர்களை அவ்விடத்தை விட்டு அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவித்திருந்த போதிலும் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | உரித்தினை மீளப் பெறுவதற்கான சட்டமூலத்தினை அடிப்படையாகக் கொண்ட சம்பந்தப்பட்ட அனுமதியற்ற காணியிலிருந்து வெளியேறும் படியாக அனுமதியின்றி வதித்திருப்பவர்களிடம் அறிவித்தல் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிறகும் வெளியேறா விடின் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சிக்கல் தீர்க்கப்பட்டு காணிகள் உரிமையினை பெற்றுக் கொள்வதற்கு தாமதமின்றி செயற்பட வேண்டும். |
| (இ) | பிரதேச செயலகம் ஒன்றினை தாபிப்பதற்கு முன் பிரதேச செயலக அதிகார தொகுதிக்குட்பட்ட பிரதேசம் மற்றம் எல்லையினை நிர்ணயிக்கப்பட்டு மும்மொழியிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் 1999 மார்ச் 03 ஆந் திகதி மற்றும் 1999 மே 19 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள முறையே திம்பிரிகஸ்யாய மற்றும் பாதுக்க பிரதேச செயலகத்திற்கு சம்பந்தப்பட்ட எல்லையீனை நிர்ணயிக்கப்பட்டு தொகுதியினை தாபிக்கும் வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிக்கப்பட்டிருக்க வில்லை. | திம்பிரிகஸ்யாய மற்றும் பாதுக்க பிரதேச செயலகத்திற்கான எல்லையினை நிர்ணயிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட வரைபு அறிக்கையினை முன் நடவடிக்கையினைக்காக உள்விவகார இராஜாங்க அமைச்சினைக்கு அனுப்பப்பட்டுள்ளது. | பிரதேச செயலகம் தாபிப்பதற்கு முன் அச்செயலக அதிகாரத் தொகுதிக்குட்பட்ட பிரதேசம் மற்றும் எல்லையினை நிர்ணயிக்கப்பட்டு மும்மொழியிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | மஹரகம நகர அபிவிருத்திக்கான காணிகளை கையேற்பதன் கீழ் போக்குவரத்துச் சபைக்கு உரிய காணியை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கையேற்கப்பட்டிருந்த போதிலும் 2016 பெப்ரவரி 02 ஆந் திகதிய பெறுமான மதிப்பீட்டு திணைக்களத்தின் நஷ்டஈட்டு பணத்தின் | அத்தொகையினை வழங்குவது தொடர்பாக எதிர்வரும் வருடங்களுக்கான மதிப்பீடுகளினை தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்பட்டு தயாரிக்கவும் நட்டஈட்டுக்கான ஒதுக்கீட்டினை ஒதுக்கப்பட்டதன் பின்னர் அத்தொகையினை வழங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அதற்குரிய ஒதுக்கீட்டினை பெற்றுக் கொள்ளப்பட்டு நஷ்டஈட்டினை வழங்குவதற்கு செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுமான மதிப்பீடான ரூபா 112 மில்லியன் தொகையினை போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | கொழும்பு தெஹிவளை. கொலன்னாவை, கெஸ்பாவ மற்றும் ஹோமாகம ஆகிய பிரதேச செயலகங்கள் நடாத்திச் செல்லப்படும் காணிகளின் உரிமை அப்பிரதேச செயலகங்களுக்கு உரியவையாக இல்லாததுடன் அவைகளின் உரிமையினை கையேற்பதற்காக இதுவரையும் முறையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. பிரதேச செயலகங்களுக்கு உரிமையில்லா இக்காணிகளில் நிர்மாணிப்பு பணிகளுக்காக அப்பிரதேச செயலகங்களினால் அரசுக்குரிய பாரிய பணத்தினை செலவிடப்பட்டிருந்தது. | கொழும்பு பிரதேச செயலகத்தினை நடாத்தப்படும் கட்டிடத்தையும் அதன் நிலத்தினையும் ஒதுக்கித் தரும்படி 2016 யூன் 08 ஆந் திகதிய கடிதம் மூலமாக கோரிக்கை விடுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையிலும் அளப்பு நடவடிக்கைகள் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. தெஹிவளை பிரதேச செயலகத்தை நடாத்திச் செல்லப்படும் காணியினை மாவட்ட நீதிமன்ற தீர்ப்பின் படி தெஹிவளை கல்கிஸ்ஸ மாநகர சபைக்கு உரியதெனவும், கொலன்னாவ பிரதேச செயலகம் அமைந்துள்ள காணி கையேற்கப்பட்ட காணியாக இருந்த போதிலும் தற்போதைக்கு அதற்குரிய தகவல்கள் தேடிக் கண்டறிய முடியாதுள்ளதுடன் புதுக் கோப்பினை ஆரம்பிக்கப்பட்டு அதற்கான உரிமையினை கையேற்பதற்கான அலுவல் மேற்கொள்வதற்கான துரித நடவடிக்கை எடுக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. கெஸ்பாவ மற்றும் ஹோமாகம பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணிகள் அரசுக்கு உரியவையாகும். | பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணியின் உரிமையினை கையேற்பதற்கான துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | திம்பிரிகஸ்யாய பிரதேச செயலக பிரதேசத்தின் ஓய்வூதிய பெறுனர்களின் ஓய்வூதியம் தொடர்புடைய சிவில் ஓய்வூதிய பெறுனர்களின் 125 கடிதக் கோப்புக்கள் மற்றும் 212 விதவை மற்றம் அனாதைப் பிள்ளைகளின் கடிதக் கோப்புகளாக | காணாமற் போயுள்ள 07 கோவைகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும், தற்காலிக 108 கோவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டு ஓய்வூதிய பணிப்பாளரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளதாகவும் மேற்கொண்டும் காணாமற் போயுள்ள கோவைகள் | காணாமல் போயுள்ள ஓய்வூதியங்களுக் கான பழைய கடிதக் கோப்புக்களை தேடிக் கண்டுபிடிக்கவோ அல்லது அவற்றினை |

| | | | |
|---|---|---|---|
| | மொத்தம் 337 கோப்புக்கள் திம்பிரிகஸ்யாய பிரதேச செயலகத்திலோ அல்லது ஓய்வூதிய திணைக்களத்தினுள்ளோ இல்லாமையினை அவதானிக்கப்பட்டது. ஆயினும், தற்காலிக கோவைகளினை மீள் ஒழுங்குபடுத்துவதற்கான முறையான மற்றும் போதியளவிலான நடவடிக்கையினை பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சம்பந்தமாக தேடிக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அறியத் தரப்பட்டுள்ளது. | ஒழுங்குபடுத்து வதற்கு முறையான மற்றும் போதியளவான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் கடிதக் கோப்புக்களின் பாதுகாப்பினை மற்றும் பேணப்படுவதனை உறுதி செய்யும் கட்டுக்கோப்பு ஒன்றினை அறிமுகம் செய்யப்பட வேண்டும். |
| (எ) | அவிசாவளை கொட்டபொடவத்தையில் அமைந்துள்ள அரச உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு சொந்தமான வாடகை வருமானம் 1999 முதல் அறவிடப்பட்டிருக்கவில்லை சம்பந்தப்பட்ட இல்லங்களின் உரிமையினை பெற்றுக் கொள்வதன் பொருட்டு வாடகை குடியிருப்பாளர்களினால் உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கில், அவிசாவளை மாணிக்கவத்தை காணியில் ஒரு நபருக்கு தலா 20 பர்ச்சஸ் வீதம் காணிப் பங்கினை பெற்றுக் கொடுக்கவும் காணிப்பங்குகளின் பெறுமதியினை பெற்றுக் கொள்ளும் போது உத்தியோகபூர்வ இல்லங்களின் பெறுமதியினை மற்றும் காணிப் பங்குகளின் மதிப்பீட்டு பெறுமதியினை பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டு செலுத்தப்பட வேண்டிய கடன் தொகையினை தேசிய வீடமைப்பு | இது தொடர்பில் என்னால் அனு குழுவொன்றினை நியமிக்கப்பட்டதுடன் அக்குழுவின் தீர்மானம் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் முன் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | உத்தியோகபூர்வ இல்லங்களில் வதித்திருக்கின்ற வாடகை குடியிருப்பாளர் களிடமிருந்து வாடகைப் பணத்தினை அறவிட்டுக் கொள்ளவும் மற்றும் நீதிமன்ற தீர்ப்பின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அபிவிருத்தி அதிகார சபையிடம் வட்டியில்லாக் கடனாக 30 வருட காலத்தினுள் செலுத்தும் படி முடிவு செய்யப்பட்டது. ஆயினும் அந்த நீதிமன்ற பணிப்பினைப்படி செயற்பட்டிருக்கவில்லை. | | |

**4. பேணதகு அபிவிருத்தி குறிக்கோளினை அடைந்து கொள்ளல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களினை அடைந்து கொண்டுள்ளதாக 2021 வருடாந்த செயலாற்றுகை அறிக்கையில் பேண்தகு அபிவிருத்தி குறிக்கோள்களினை அடைந்து கொள்வதற்கான செயலாற்றுகையின் கீழ் 29 பிரிவுகளுக்கான பேண்தகு அபிவிருத்திக் குறிக்கோள்கள் 75 கீழ் 136 குறிகாட்டிகளில் முன்னேற்றத்தினை காட்டப்பட்டிருந்தது. அவற்றுள் 16 குறிகாட்டிகளில் முன்னேற்றத்தினை நூற்றுக்கு 50 வீதத்திற்கும் கீழான பெறுமதியினையும் 42 காட்டிகளில் முன்னேற்றத்தினை நூற்றுக்கு 50-74 இடையிலான பெறுமதியிலும் இருந்தன. 15 குறிகாட்டிகள் தொடர்பான முன்னேற்றத்தினை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுப் பரவலுடன் மக்கள் வாழ்வினை பேணிச் செல்வதன் அலுவலினைக்கு முன்னுரிமை அளிப்பது அரசின் பொறுப்பாக இருந்தமையினால் செயலாற்றுகை காட்டிகளில் முன்னேற்றம் கீழ் பெறமானத்தில் காணப்பட்டது. | பேண்தகு அபிவிருத்திக்கான குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மாவட்ட செயலகத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 1423, உண்மையான ஊழியர் எண்ணிக்கை 1237, வெற்றிடங்களுக்கான ஊழியர் | தற்போது நிலவும் வெற்றிடங்களுக்கான எண்ணிக்கையினை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் கிராம சேவகர் | தற்போதுள்ள பணிக்குழாமினை தொடர்ந்தும் செயற்திறன்மிக்க சேவையினை பெற்றுக் கொடுப்பதற்கு போதுமானதாக |

எண்ணிக்கை 248 மற்றும் மேலதிக ஊழியர் எண்ணிக்கை 62 ஆக இருந்தன. அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 107 ஆன போதிலும் அச்சேவையில் உண்மையான ஊழியர் எண்ணிக்கை 169 ஆக இருந்தமையால் மேலதிக ஊழியர் எண்ணிக்கை 62 ஆகும். வெற்றிடங்களான ஊழியர் எண்ணிக்கையினுள் அரச முகாமைத்துவ சேவையில் 90 வெற்றிடங்களான பதவிகள் மற்றும் கிராம சேவகர் உத்தியோகத்தர்களுக்கான பதவிகளில் 87 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டமையினால் அது மக்களுக்கு அளிக்கப்படும் சேவையின் செயற்திறன் மற்றும் உற்பத்தி திறனினைக்கு மோசமான தாக்கத்தினை உண்டுபண்ணக் கூடியதாக இருப்பதனை அவதானிக்கப்பட்டது.

உத்தியோகத்தர் III தரத்திற்கு ஆட்சேர்க்கும் போட்டிப் பரீட்சையினை வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் நாட்டில் நிலவிய கொவிட் தொற்று நிலைமை காரணமாக அதனை நடாத்தப்படாததுடன் முகாமைத்துவ சேவையிலுள்ள வெற்றிடங்களின் சேவையினை புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலமாக இந்த கடமைக்கான அலுவல்களினை ஈடுசெய்து கொண்டும் மற்றும் கிராம சேவகர் வெற்றிடங்களுக்கான சேவையினை கடமையில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்திக் கொண்டும் பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு செயற்திறன் மற்றும் உற்பத்தி திறனுடனான சேவையினை பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்தி உத்தியோகத்தர் களுக்கான ஆட்சேர்ப்பினை அரச கொள்கைக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளதாயும் மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் பொறுப்புகள் விருத்தியடைந்துள்ளதுடன் அது மிகவும் பாரியளவிலான வீச்சில் பரிவியுள்ளமையினால் இநத மேலதிக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பயனுள்ள மற்றும் செயற்திறனுள்ள அரச சேவைகளுக்கான அலுவல்களில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இருப்பின் அங்கீகரிக்கப்பட்ட